# புதிய இதயம்

திங்கள் இதழ்

'CREATING NEW HEARTS TO RISE AND SHINE'

மலர் - 2 இதழ் - 16 | எழு...ஒளிவீசு... எசாயா 60:1 | ஆகஸ்ட் 2024


## சுதந்திரம்

## நம் உரிமை...





ஆசிரியரிடமிருந்து....

# இதய அன்பர்களே...

சுயராஜ்யம் எனது பிறப்புரிமை:
அதை அடைந்தே தீருவேன்

- பாலகங்காதர திலகர்

உண்மையான தேசப்பற்றுள்ள ஒவ்வொருவரும் அவரவர் கடமையை சரியாக செய்தாலே போதும் தினமும் சுதந்திர தினம் தான். காந்தியின் கேள்விக்கு இன்று வரை பதில் யாரிடமும் இல்லை. நள்ளிரவில் கழுத்து வரை அணிகலன் அணிந்து சென்றாலும் திருட்டு போகாத நிலை வந்தால் மட்டுமே சுதந்திரம் அடைந்ததாகக் கூறினார். ஆனால் இன்றைய நவீன இந்தியாவில் நள்ளிரவில் சட்டத்தையே திருடிச் சென்று விடுகிறார்களே!

ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோம்

- பாரதியார்

உண்மையில் நாம் ஆனந்தமாக தான் சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றோமா! நமக்கு தான் சுதந்திரம் கிடைத்துவிட்டதே பிறகு ஏன் எல்லையில் ராணுவ வீரர்கள் காவல் காக்க வேண்டும்? நமக்கு தான் சுதந்திரம் கிடைத்துவிட்டதே பிறகு ஏன் பிறருக்கு பயந்து வாழ வேண்டும்?

முன்னேற்றத்திற்கான சிறந்த பாதை சுதந்திரப் பாதை

- ஜான் எ.்.ப் கென்னடி

ஆட்சி என்ற பெயரில் ஒரு அடிமைத்தனம்.
பாதுகாப்பு என்ற பெயரில் ஒரு அடிமைத்தனம்.
வறுமை என்ற பெயரில் ஒரு அடிமைத்தனம்.
வேலை என்ற பெயரில் ஒரு அடிமைத்தனம்.
கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில்
ஒரு அடிமைத்தனம்.
சம உரிமை என்ற பெயரில் ஒரு அடிமைத்தனம்.
மொழி என்ற பெயரில் ஒரு அடிமைத்தனம்.

மதம் ஜாதி என்ற பெயரில் ஒரு அடிமைத்தனம்.
பெண் முடிவு எடுப்பதில் ஒரு அடிமைத்தனம்.
ஆண் கௌரவம் என்ற பெயரில் ஒரு அடிமைத்தனம்.
இப்படி பல அடிமைத்தனங்களுக்கு மத்தியில் எப்படி சுதந்திரம் பெற்றீர்கள் என்று தான் தெரியவில்லை.
சுதந்திரத்தின் விலை நித்திய விழிப்புணர்வு
- தாமஸ்ஜெபர்சன்

ஊழல் இல்லாத நாடா?
கருப்பு பணம் இல்லாத நாடா?
வளர்ச்சி அடைந்த நாடா?
கொலை, கொள்ளை,கற்பழிப்பு இல்லாத நாடா?
அரசியல் மற்றும் அரசுப் பிழைகள் இல்லாத நாடா?
மண்வளம், மனவளம் நிரம்பிய நாடா?
வல்லரசு அடைந்த இல்லை இல்லை
நல்லரசு இருக்கும் நாடா?
காசுக்கும், பிரியாணிக்கும், குவாட்டருக்கும்
ஓட்டை விற்காத நாடா?
மக்களுக்கான சட்டம் உள்ள நாடா?
இல்லை சட்டத்திற்காக மக்கள் உள்ள நாடா??
படித்தவர்கள் ஆட்சி செய்யும் நாடா?
சமூக உரிமை கிடைத்துவிட்ட நாடா?
ஆதார் அட்டை இருந்தும்
இல்லாமலும் அடையாளத்தை இழக்காமல்
இருக்கும் நாடா?
விவசாயம் செழித்துக் கொண்டு இருக்கும் நாடா?
ஏற்றுமதி செய்வதைக் காட்டிலும் இறக்குமதியில்
மதியை இழந்து கொண்டு இருப்பதே தெரியாமல்
இருக்கும் நாடா.?
கல்வி,மருத்துவம்,குடிநீர்,மின்சாரம்
இதில் அதிக உபரி சம்பாதிக்காத நாடா?
மது மாது சூது இல்லாத நாடா?
அம்பானி மல்லையா போன்றவர்களின் கடனை
தள்ளுபடி செய்ய வாய்ப்பு இல்லை என்று அறிக்கை
விடுத்து உள்ளதே?இதுதான் சுதந்திர நாடா?
இந்திசமஸ்கிருத மொழிகளை புதிய கல்விக்
கொள்கையில் ஆதரிக்கும் மூடர்கள்
இல்லாத நாடா?
ஒரு ஓட்டை போட்டு விட்டு மூன்று
முதல்வர்களை சந்திக்காத நாடா?
பக்கத்து மாநிலத்தில் இருந்து தண்ணீர்
தர மறுக்கும் மக்கள் இல்லாத நாடா?

ஒரே இரவில் ஒரே நாளில் நாடே விற்பனைக்கு என்ற சூழல் ஏற்பட வாய்ப்பே இல்லை என்று உறுதியாக சொல்ல முடியுமா??

பல குற்றங்கள் உண்டு ஆனால் தண்டனை கிடைக்காத நாடு அல்லவா!

நீதி தேவதையின் கண்மூடி இருக்கும் நாடுதானே அப்புறம் எப்படி பயம் இருக்கும்

காசு இருந்தால் நீ தான் எல்லாம் என்று நினைக்கும் நாடுதானே!ஆங்கிலம் பிழையில்லாமல் பேசினால் அறிவாளி என்று நினைக்கும் நாடுதானே! தமிழ் பற்றி பேசினால் பாதுகாப்பு எல்லையை விட்டு வெளிவர தயங்குகிறோம் என்று ஏளனம் செய்யும் நாடுதானே!

அந்நிய கலாச்சாரத்தின் மீது மோகம் குறையாத நாடு தானே!

தாய்மொழியில் வளர்க்காத அறிவை பிற மொழியில் வளர்க்க நினைக்கும் மேதாவிகள் நிறைந்த நாடு தானே!இப்படி பல கேள்விகள் இருந்தும் எப்படி சுதந்திர தினம் கொண்டாடுகிறோம்!

எங்கே மனம் பயமில்லாமல் தலைநிமிர்ந்து நிற்கிறதோ அங்கு அறிவு சுதந்திரமாக இருக்கும்.
- இரவீந்திரநாத் தாகூர்

மற்ற நாட்களில் தேசப்பற்று என்பது கிடையாது. ஆம், மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம், ஊருக்கு ஊர்,தெருவுக்கு தெரு,,அட ஏன் வீட்டுக்கு வீடு கூட ஒற்றுமை இல்லை.கேட்டால் ”வேற்றுமையில் ஒற்றுமை கண்ட நாடு இந்தியா” என்று மார்பை தட்டிக் கொள்வது தான் சுதந்திரமா?

ஒரு நல்ல விஷயத்தை சக மனிதர் கூறினால் அவன் மூடன், முரடன்,பைத்தியம், வேலையில்லாதவன் என்று பல விமர்சனங்கள்

வரும்.அதுவே நடிகர், நடிகைகள் சொல்லிவிட்டால் போதுமே வேதவாக்காக செயல்படுவீர்கள் அல்லவா! இந்தியாவில் பிறந்து வளர்ந்து படித்து பிறகு வேலை மட்டும் இந்தியாவை விட்டு வெளியே சென்று பார்ப்பது தேசப்பற்று அல்லவா!

நமது இலட்சியங்களை அடைவதில் நமது வழிமுறைகள் முடிவு போலவே தூய்மையாக இருக்க வேண்டும்.

- ராஜேந்திர பிரசாத்

அன்று ஆங்கிலேயர்களிடம் அடிமையாக இருந்தோம். இன்றும் குறைந்தது யாரோ ஒருவரின் அன்பில், காதலில், நட்பில், உறவில், கற்பனையில், ஆட்சியில், பழியில் இப்படி பல கோணத்தில் அடிமையாக தான் இருக்கிறோம் இனியும் இருப்போம் அப்புறம் எப்படி சுதந்திர தினம் கொண்டாடுகிறோம்



சுதந்திரம் நம்மிடம் உள்ளது. ஆனாலும் அடிமைகளாகவே இருக்கிறோம். இது அறியாமையா? இல்லை அறிய முயற்சி செய்யாமல் இருப்பதா? சுதந்திரம் என்று எதனை குறிப்பிடுகிறோம் என்று நமக்கு தெரியவில்லை.. நீங்கள் நீங்களாக இருப்பதே சுதந்திரம்தான். சுதந்திர தினத்தில் சமூக வலை தளத்தில் தேசப்பற்று குறித்து விளம்பரப்படுத்துவதால் மட்டும் நமக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது என்று எண்ணி துள்ளிக் குதிக்க வேண்டாம். உண்மையான சுதந்திரம் உங்கள் மனதில் உண்டு. நினைத்ததை அடைந்து, ஆசைபட்டதை வென்று, மகிழ்ச்சியாக நீங்கள் நீங்களாக இருப்பது தான் உண்மையான சுதந்திரம்.

எழுந்திரு இந்தியாவே எழுந்திரு
நீ நீண்ட நேரம் உறங்கி விட்டாய்.

- சரோஜினி நாயுடு

என்னுடைய வயதிற்கு எனக்கு கிடைத்த அனுபவத்தை வைத்து ஏதோ எழுதி விட்டேன். இதனால் நான் தேசப்பற்று இல்லாதவன் என்று நினைத்து விட வேண்டாம். என் தேசம் இன்னும் சுதந்திரத்தை அடையவில்லையே என்று ஏமாற்றத்துடன் இதயம் கனத்து எழுதுகிறேன். இதையெல்லாம் கூறினால் ”இந்தியன்”என்ற சிறப்பு பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுவோம் அல்லவா! ஒரு நாள் மட்டும் தேசிய கொடியை மார்பில் குத்தினால் போதாது. பாடினால், பேசினால், போதாது, செயல்படுங்கள் தேடுங்கள். எது உண்மை சுதந்திரம் என்று. நான் இன்றும் சுதந்திரம் அடையவில்லை. வீட்டில் எனக்கு இருக்கும் சுதந்திரம், நட்பு வட்டத்தில், சமூகத்தில் எனக்கு இல்லை. என்னுடைய அங்கீகாரம் பிறரின் அகங்காரத்தால் மறுக்கப்படுவதால் எனக்கான சுதந்திரம் இன்னும் எனக்கு கிடைக்கவில்லை. எனக்கு என்றாவது ஒருநாள் சுதந்திரம் கிடைக்கும். அப்போது எனக்கு வாழ்த்துக்கள் சொல்லுங்கள் ஏற்றுக்கொள்கிறேன்.இன்று பல தியாகிகளின் உயிர் தியாகத்தால் கிடைத்த சுதந்திரத்தை அவர்களின் ஆத்மாவிற்கு மன்னிப்பு கேட்கும் நாளாக மட்டும் பார்க்கிறேன்..அவர்களின் தியாகம் இன்று அனுசரிக்க படவில்லை என்றால் என்றாவது ஒருநாள் அது அனுசரிக்கப்படும் என்ற நம்பிக்கையில் விடியலை நோக்கி பயணிக்கிறேன் என்று கூறும் தினமாகக் கருதுகிறேன்.

இதய அன்பில்...

அருள்பணி. இ. ஜோசப்..

புதிய இதயம்
திங்கள் இதழ்

# தமிழ் அறம் தொடர்ச்சி,

மரபுப்பாவலர். அகன், கீரனூர், புதுக்கோட்டை (மாவட்டம்).

ஆடி 18-ஆம் நாளுக்குப் பின், விதைக்கும் பணியைத் தொடங்கி, ஆவணி-புரட்டாசி மழைக்காலத்தில், விதைகள் முளைத்துத் தளிர்விட்டு, ஐப்பசி-கார்த்திகை இருமாதக் குளிர் காலத்தில் பயிர் செழித்து வளரும்! மார்கழி-முன்பனிக் காலம் தொடங்கித், தை - முன்பனி காலத்திற்குள் விளைந்து, அறுவடைக்கு அணியமாகும்!

தை மாதத் தொடக்கத்திலிருந்து அறுவடை நடக்கும். பின்பனிக்காலமான மாசி-பங்குனிக்குள் அறுவடை முடிந்துவிடும்.

உழவுத் தொழிலின் பயன்கள் வீடு வந்து சேரத் தொடங்கும் தை மாதத்ததைச் சிறப்பித்து தை பிறந்தால் வழி பிறக்கும் எனப் போற்றி புது அரிசியிட்டுப் பொங்கலிட்டு மகிழ்வர். புத்தரிசி, புதுவெல்லம், பொங்கல் ஆகியனவற்றைக் கதிரோனுக்குப்படைத்தும், உழவுத் தொழிலின் துணையாக விளங்கிய மாடுகளுக்கு ஊட்டியும் மகிழ்வர்!

இல்லங்களுக்குப் புதுவண்ணம் தீட்டியும், புத்தாடை அணிந்தும், மலர் சூடியும், மாடுகளுக்கு மாலை இட்டும் அகம் மகிழ்வர்.

கறவை மாடுகளை அவிழ்த்து விட்டும், காளை மாடுகளை - மைந்து விரட்டு, சல்லிக்கட்டு, ஏறுதழுவுதல் - என விழா எடுப்பர்

குய் - துளைப்புக்கருத்து வேர்ச்சொல்
குய் , குய்ம் , குய்ம்பு , கும்பு , கொம்பு!

கூரிய வலிமையான கொம்புகளைக் கொண்ட காளைகளை அடக்கிப் பிடிக்கவும், பிடித்து அடக்கவும், கடுமையான வலிமையும், மன உறுதி மிக்க துணிவும் வேண்டும்! தன்னந் தனியாகக் காளையை அடக்கித்தழுவிடச் சிறந்த மன உறுதியும் துணிவும் கொண்ட இளங்காளையரை மணப்பதை, அக்காலக் குமரப்பருவத்துக் குமரியர் சிறப்பானதாக எண்ணினர்!

## சல்லிக்கட்டு:

அன்றைய கீழ்மதிப்புக் காசுகள் ‘சல்லி’ எனப்பட்டன! அக்காசுகளைத் துணிகளில் கட்டி முடிந்து, காளைமாடுகளின் கொம்புகளில் கட்டி, அவிழ்த்து விரட்டுவர்! அக்காளைகளைப் பிடித்து அடக்குவோர், அச்சல்லிக்கட்டு முடிச்சுகளை பறித்து எடுத்துக் கொள்வர்! இவ்விளையாட்டே சல்லிக்கட்டு.

## மைந்து விரட்டு:

மைந்து = வலிமை
மைந்து , மைஞ்சு , மஞ்சு!

மஞ்சு வெருட்டு , மஞ்சு விரட்டு
வலிமைமிக்க காளைமாட்டை, வலிமையும் துணிவும் மிக்க இளங்காளையர் அடக்கிப்பிடித்து தழுவும் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் இ∴தே பின்னர், மீண்டும் சித்திரை மாதம் தொடங்க, உழவுப்பணியும் தொடங்கும்! எனவே, சித்திரையில் தொடங்கும் மாதமே ஆண்டுக் காலத்தின் முதல் மாதமாகும்! சித்திரை முதல் நாளே ஆண்டு தொடங்கும் நாள்!

## நாள் மீன்மாதங்கள்:

விண்மீன்களுள், கதிரோனைப்போன்று ஒளியும் வெம்மையும் கொண்டு சுழன்றவாம்ற உள்ளவை நாள்மீன்கள் எனச் சுட்டப்பெற்றன!

நாள் = ஒளி, ஒளியுடன் தொடங்கும் காலம் தானே ஒளிரும் மீன்கள் நாள்மீன்கள் ஆகும்!

ஒவ்வொரு நாள் மீனையும் சுற்றி, வலம் வந்தவாறு, அந்த நாள்மீனின் ஈர்ப்பு விசைக்கு ஆட்பட்டும், அந்த நாள் மீனின் ஒளியைத் தான் பெற்றுக்கொண்டும், ஒளிதருபவை, கோள் மீன்கள் ஆகும்! கோள்மீன்களே, கோள்கள் எனப்பட்டன! கதிரோன் என்னும் நாள்மீனைச் சார்ந்து சுற்றிவரும் கோள்களே, உலகம், புதன், செவ்வாய், வெள்ளி,

வியாழன், காரி, கருங்கோள், செங்கோள் ஆகும்.

ஓர் ஓரையில், நாள் மீனும் கோள் மீன்களும் இருக்கின்றன!

முதலில், ஓரைகளின் வடிவத் தோற்றத்தைக் கொண்டு ஆடு என்னும் மேழம், எருது, இரட்டை, கடகம், (நண்டு), மடங்கல் (சிம்மம்), கன்னி, துலை, நளி (தேள்), சிலை, சுறா, கும்பம், மீனம் என்று, 12 மாதங்களின் பெயர்களைக் குறிப்பிட்டனர்!

பின்னர், ஒவ்வோர் ஓரையிலும் உள்ள ஒளிரும் நாள்மீனைக் கண்டு அறிந்தபின்னர், அந்த நாள்மீன்களுக்கு இட்ட பெயரையே, அந்தந்த மாதங்களுக்கும் இட்டழைத்தனர். அப்பெயர்களே நாள்மீன் மாதப் பெயர்கள்!

| ஓரை மாதப் பெயர் | | நாள்மீன் மாதப் பெயர் | பருவம் |
|---|---|---|---|
| 1 | மேழம் (மேசம்) | சித்திரை | |
| 2 | எருது (ரிசபம்) | வைகாசி | இளவேனில் |
| 3 | இரட்டை (ஆடவை) | ஆனி | |
| 4 | கடகம் (நண்டு) | அடி | முதுவேனில் |
| 5 | முடங்கல் (சிம்மம்) | ஆவணி | |
| 6 | கன்னி | புரட்டாசி | கார்(மழை) |
| 7 | துலை (துலாம்) | ஐப்பசி | |
| 8 | நளி (தேள்) | கார்த்திகை | குளிர் |
| 9 | சிலை | மார்கழி | |
| 10 | சுறா | தை | முன்பனி |
| 11 | கும்பம் (குடம்) | மாசி | |
| 12 | மீனம் | பங்குனி | பின்பனி |

இவ்வாறு, ஓர் ஆண்டுக் காலத்தின் 12 நாள் மீன் பெயர்களையும், பெரும் பொழுதுகளான பருவங்களையும் நம் தமிழர் இன வள்ளுவக் கணியர்கள் கணித்த அறிவித்தனர்!

புதிய இதயம்
திங்கள் இதழ்

# தொடரட்டும் சுதந்திரமும் மக்களாட்சியும்...

அருள்முனைவர். இரா. மரிய டெல்லஸ்
மறைமாவட்டத் தலைமைச் செயலர், சிவகங்கை



இந்தியா எனும் நமது நாடு, வெள்ளையரின் பிடியிலிருந்து விடுபட்டு, சுதந்திரக் காற்றைச் சுவாசித்து 77 ஆண்டுகள் கடந்துவிட்டன. அதுமட்டுமல்ல, கி.பி. 1950இல், மக்களாட்சி முறையை வளர்த்தெடுக்கும் நோக்கோடு புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு 74 ஆண்டுகளையும் கடந்து மக்களாட்சி அமைப்பு வெற்றி விழா கொண்டாடி வருகின்றது.

சுதந்திரமும் மக்களாட்சியும் இந்திய மண்ணில் நீண்ட காலம் தொடர வேண்டும் என்பது என்னைப் போன்றோரின் பேராவல். இதற்குரிய சில வழிமுறைகளை என் அனுபவத்தின் அடிப்படையிலும், எனக்குள்ள சமூக-அரசியல் அறிவின் அடிப்படையிலும் இச்சிறுகட்டுரையில் பகிர்ந்து கொள்ள முயல்கின்றேன்.

## இந்தியா - இது நமது பெருமை...

உலகில் உள்ள ஒரு சில நாடுகளுக்குச் சென்று வருவதற்குக் கடவுள் எனக்கு வாய்ப்புக்களைக் கொடுத்தார். போர் முனையில் இருக்கும் நாடுகளுக்கும், பசியும் பட்டினியோடும் போராடும் நாடுகளுக்கும் சென்றுத் திரும்பி வந்துள்ளேன்.

அந்நாடுகளோடு இந்தியாவை ஒப்பிட்டுப் பார்த்தால், நம் இந்தியா நாடு எல்லா வகையிலும் பெருமைக்கும் சிறப்புக்குமுரிய நாடு என்று தான் சொல்ல வேண்டும். இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. எனினும், இதில் இரண்டை மட்டும் காண்போம். ஒன்று, இந்தியா என்பது ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரத்தைக் கொண்ட நாடல்ல. மாறாக, பல இனங்களையும், பல மதங்களையும், பல மொழிகளையும், பல கலாச்சாரங்களையும் கொண்ட கூட்டொருங்கிய நாடு. இதன் சிறப்பே



'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதில் தான் உள்ளது. வேற்றுமைகள் பல இருந்தாலும், மக்களாட்சி எனும் அரசியல் கொள்கையின்கீழ் இந்தியா ஒரே நாடாக இருந்து வருவது உலக நாடுகள் அனைத்திற்கும் இது மிகப் பெரும் வியப்பாகும். இரண்டாவது, இப்பெருமையையும் சிறப்பையும் தவிர, மற்றொரு சிறப்பும் உண்டு. அது என்ன? இந்தியாவைப் போலவே சமகாலத்தில் ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற்ற நாடுகள் (பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பர்மா...) பல உள்ளன. அவைகளில் பெரும்பாலானவை, சர்வதிகாரர்களின் ஆட்சிக்குட்பட்டதாகவும், மதவாதக் கொள்கைக்குட்பட்டதாகவும், இராணுவ ஆட்சிக்குட்பட்டதாகவும் மாறிவிட்டன.

அங்கெல்லாம் மக்கள் மக்களாக வாழும் நிலையில்லாது, ஆங்கிலேயர் காலத்திலிருந்த அடிமைத்தனத்தைவிட மிகவும் கொடுமையான நிலையே நிலவி வருகின்றது. ஆனால், இந்திய நாடு மட்டும் தான் தொடர்ந்து மக்களாட்சி நாடாக, முழுச் சுதந்திரம் பெற்ற நாடாக, வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வாழும் நாடாக இருந்து வருகின்றது. இதை மாற்றிட முயலும் தீய சக்திகள் இங்கு இல்லாமல் இல்லை.

## மக்களாட்சி தொடரட்டும்

கி.பி. 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதி, இந்திய நாடு ஆங்கிலேயரின் ஆட்சியிலிருந்து முழுச் சுதந்திரம் பெற்றது. அதை மக்களாட்சியாக உருவாக்கும் பணியில் வேறுபாடுகளைக் கடந்து பல தேசியத் தலைவர்கள் உழைத்தார்கள்.

நாடு சுதந்திரம் பெறும் நேரத்தில், பல இடங்களில் இந்து-இஸ்லாமியர் மோதல்கள் வெடித்தன. இதனால் பலரும் உயிர் துறந்தனர். புலம்பெயர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடமாறிச் சென்றவர்கள் பலர்.

மகாத்மா காந்தியோ இரு மதத்தவர்களும் ஒற்றுமையாக இருந்து, ஒரே நாடாகவே இருக்க வேண்டும் என்று கூறி சாகும்வரை உண்ணாவிரம் மேற்கொண்டார். ஆனால், அதிகார-ஆட்சியில் அமர வேண்டும் என்று நினைத்தவர்கள் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. முகமது அலி ஜின்னா தலைமையில் பாகிஸ்தான் இஸ்லாமிய நாடாக பிரிந்து சென்றது. எனினும், இந்தியா சமயச்சார்பற்ற நாடாக, முழுச் சுதந்திரம் பெற்று ஜவஹர்லால் நேரு தலைமையில் பயணிக்கத் தொடங்கியது.

அதைத் தொடர்ந்து, தொடக்கக் கால அரசியல் தலைவர்கள் இந்தியாவை ராம் ராஜியமாக மாற்றிடும் ஆர்எஸ்எஸின் தீவிர முயற்சியை முறியடித்து, கி.பி. 1950இல் முழுச் சுதந்திரமுள்ள மக்களாட்சியாக மாற்றினர். அதற்கான அரசியல் அமைப்புச் சட்டத்தையும் டாக்டர் அம்பேத்கார் தலைமையில் உருவாக்கி, நடைமுறைக்குக் கொண்டு வந்தனர்.

எனினும், தீவிர இந்துச் சமயப்பற்றுக் கொண்டவர்கள்

இந்தியாவை இந்து நாடாக மாற்றிடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். இதனால், பிரதமராக இருந்த நேரு அவர்கள், கி.பி. 1976இல், 42வது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தின் வழியாக 'சமயசார்பற்ற நாடு' என்ற கொள்கையை அரசியல் சாசனத்தில் எழுத்துவடிவம் பெற வழிவகுத்தார்.

இங்கு ஓர் உண்மையை மறந்துவிடக்கூடாது. இந்தியா தொடக்கத்திலிருந்து, சமயச்சார்பற்ற நாடாக இருந்து வந்துள்ளது என்பதே அது. அதாவது, 1994இல் நடைபெற்ற வழக்கிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பில் இக்கருத்து மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆம், இந்தியா இன்று உலகில் உள்ள 193 நாடுகளில் மிகப் பெரிய சமயச் சார்பற்ற ஜனநாயக நாடாக உலக அரங்கில் திகழ்ந்து வருகின்றது. இதற்குக் காரணம், ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற போது, இந்திய மண்ணில் தியாகத்தையும் உயிரையும் செந்நீராக விதைத்த தியாகிகளின் வழிகாட்டுதலே காரணம். அவர்கள் அனைவரும் மதங்களையும் மொழிகளையும் இனங்களையும் சாதிகளையும் கடந்து 'சமயச் சார்பற்ற' இயல்பைப் போற்றி வளர்தவர்கள்.

## போர்க் களத்தில் மக்களாட்சி...

இந்தியா சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து, ஆர்எஸ்எஸ் எனும் தீவிர அமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்தியாவை 'ராம் ராஜியமாக' 'இந்து நாடாக' மாற்றிடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். அதனுடைய உச்சகட்டம், 2023 சூலை 18க்குப் பிறகு மிகத் தீவிரமானது என்றே சொல்ல வேண்டும். காரணம், பிஜேபியின் எதிர்க்கட்சியான தேசிய காங்கிரஸ் கட்சி பல மாநிலக் கட்சிகளுடன் இணைந்து 'இந்தியா' என்றொரு அரசியல் கூட்டணியை தேசிய அளவில் உருவாக்கியது. இதன் அடிப்படை நோக்கம் என்பது மக்களாட்சியையும் அரசியல் சாசனத்தையும் காப்பதாகும்; அத்துடன் மதவாதக் கட்சியான பிஜேபியை ஆட்சிப் பீடத்திலிருந்து இறக்கிவிடுவதாகும்.
அந்த நாள் தொடங்கி, ஆர்எஸ்எஸ் அமைப்பின் நேரடிக் கட்சி அரசியிலில் தீவிரமாக ஈடுபட்டு வரும் பிஜேபி கட்சி, தன்னுடைய ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் போதே இந்திய நாட்டை இனிமேல் 'இந்தியா' என அழைக்கமாட்டோம் என்றும், அதை 'பாரத் அல்லது பாரதம்' என்று தான் அழைப்போம் என்று முடிவு செய்துவிட்டார்கள்.

இதை அரசு துறைகளிலும் அரசின் நிர்வாகத் துறைகளிலும் கட்டாயமாக்கிவிட்டார்கள். இது எந்தளவு மதவெறி கொண்டவர்கள் என்பதை வெளிப்படுத்தும் செயலாகும். தங்களின் திட்டத்தை நிறைவேற்ற, கடந்த 2024 ஏப்ரல் 19 தொடங்கி சூன் 02 வரை நடைபெற்ற 19வது நாடாள மன்றத் தேர்தலை முழுமையாக நம்பியிருந்தது. ஆனால் அக்கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆதலால், அம்முயற்சியைத் தற்சமயம் தள்ளிப் போட்டுள்ளது. மக்களாட்சியின் போர்க்களம் சற்று ஓய்ந்திருக்கின்றது.

## ஆங்கிலேயரின் அரசியல் வாரிசுகள்

ஆங்கிலேயர் இந்தியா நாட்டை 'சந்தைப் பொருளாதார' இடமாக்கி, நாட்டை ஒற்றை அதிகாரத்தின்கீழ் ஆளவும் 'Divide and Rule' என்னும் சூழ்ச்சியை வகுத்து, திறமையாக ஆட்சி செய்து வந்தனர். தங்களின் சந்தைப் பொருளாதாரத்திற்கு உதவிய பெரும் முதலாளிகளை மட்டுமே ஆதரித்தனர்; அவர்களின் திட்டங்களை எளிதில் நிறைவேற்றினர். செல்வர்கள் மேலும் செல்வர்களாக மாறினர்; ஏழைகள் இன்னும் ஏழைகளாகினர்.

அதேவேளையில், தங்களின் வியாபார இலாபத்திற்கு அடிபணிய மறுத்த பல சமஸ்தானங்களையும் குறுநில மன்னர்களையும் தங்களின் நேரடி ஆட்சிக்குக் கீழ் கொண்டு வர பிரித்தாளும் சூழ்ச்சியைப் பயன்படுத்தினர். அதுமட்டுமல்ல, அவர்கள்மீது நேரடியாகப் போர்கள் செய்து ஆட்சியையும் கைப்பற்றினர்.

தங்களை எதிர்ப்போரை அடையாளமில்லாது அழிப்பதற்காகப் பலரைச் சிறையில் அடைத்தனர்; இன்னும் சிலரைக் கொன்று குவித்தனர்; தங்களை எதிர்ப்போரின் குடும்பங்களுக்கும் ஊர்களுக்கும் எந்த வகையிலும் அடிப்படை உதவிகள் கிடைக்காத வகையில் செய்தனர். ஆனால், தங்களுக்குத் தூபம் போடுவோரைத் தங்கள் நண்பர்களாக மாற்றிக் கொண்டார்கள்.

இவைகள் அனைத்தும் இன்றுள்ள ஒன்றிய அரசரான பிஜேபி கட்சியின் கொள்கைகளையும், செயல்பாடுகளையும், ஆட்சி முறையையும் பிரதிபலிப்பதாக உள்ளன. இதை வேறுவகையில் சொல்வதென்றால், இன்றுள்ள இந்தியாவின் மக்களாட்சியில் மீண்டும் 'ஆங்கிலேயர்களின் வாரிசுகளாக' இந்த பிஜேபி கட்சினர் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றனர். ஆம், 'வெள்ளையரிடமிருந்து பிடுங்கி சுதந்திரத்தை கொள்ளையரிடம் கொடுத்தோமே' எனும் கவிதை வரிகள் தான் இங்கு நியாபகத்திற்கு வருகின்றது. அதானியையும் அம்பானியையும் வளர்த்தெடுக்கச் சமானிய மக்களை விலைபேசும் மதச்சார்புள்ள பிஜேபி கட்சியாக இருப்பது, இந்தியாவின் இறையாண்மைக்கும் மக்களாட்சிக்கும் மிகப் பெரிய ஆபத்தாகும். அதைவிட சாமானியர் பயன்படுத்தும் இருசக்கர வாகனத்திற்கு 28சதவிகிதம் வரியும், செல்வந்த தனிநபர் ஹெலிகாப்டருக்கு 5 சதவிகித வரியும் விதிப்பதன் வழியாக, முதலாளித்துவத்தை வளர்க்கும் மக்களாட்சியாக இந்தியாவை மாற்றிவிட்டார்கள் என்று அறிய முடிகின்றது.

## சுதந்திரமும் மக்களாட்சியும் தொடர உழைப்போம்...

நமது சுதந்திர இந்தியாவின் பெருமையையும் மக்களாட்சியின் சிறப்பையும் அறிந்து கொண்ட நாம், நமது அரசியல் கடமைகளையும் சமூகக் கடமைகளையும் சிறப்பாக ஆற்றிட முன்வர வேண்டும். காசுக்காக ஜனநாயக உரிமையான ஓட்டை விற்றப் பிறகு அரசியல் வாதிகளிடமிருந்து எதை நாம் உரிமையோடு கேட்க முடியும்?

அதுமட்டுமல்ல, உயர் அரசுப் பதவிக்குத் தேர்வு நடத்துவது போல அரசியல்வாதிகளுக்கும் நடத்தாதது வரை, அரசியலில் அயோக்கியர்கள் அதிகப் பேர் இருக்கத்தான் செய்வார்கள். அதுமட்டுமல்ல, கட்சி தாவும் எவரும் இனிமேல் அரசியல் செய்ய முடியாத அளவுக்குத் தீவிரமானச் சட்டங்கள் தேவை. அது போல, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஓர் அரசு வேலை என்ற திட்டத்தைக் கொண்டு வந்து இலவசங்களை ஒழிக்க வேண்டும்.

நாட்டில் உள்ள தலைவர்களை மட்டும் நேர்மையாளர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் மக்களிடையே இன்னும் நேர்மையில்லை, தங்களுடைய காரியத்தை நிறைவேற்ற இலஞ்சம் கொடுக்கும் மனநிலையையும், போட்டி மனநிலையையும், சாதிய வெறியையும், மத வெறியையும், மற்றவர்களைவிட நான் பெரியவன் என்ற அகந்தையையும் மாற்றிக் கொள்ள வேண்டும். அரசியல் ஆதாயமற்ற சேவை என்ற நிலையை ஏற்படுத்தாத வரை இங்கு தவறுகள் நடக்கத் தான் செய்யும்.

### முடிவாக...

இந்திய நாட்டின் சுதந்திரமும் மக்களாட்சியும் காலம் முழுவதும் தொடர்வதற்கு ஒவ்வொரு குடிமகனும் கடமை உணர்ந்து செயல்பட வேண்டும். மக்களைப் பிரித்தாளும் சமய-சாதி சார்பான கட்சிகளை அடையாளம் கண்டு, அவைகளை ஒதுக்கிவிட வேண்டும்.

சுதந்திரம் எனும் பெயரில் எதையும் செய்யலாம் எனும் போக்கு இளைஞர்களிடையே மிக வேகமாகப் பரவி வருகின்றது. அதைவிட மேலாக, சமூக-அரசியல் பொறுப்புள்ள தனிமனிதர்களையும், சமூகங்களையும், அரசியல் கட்சிகளையும் உருவாக்க வேண்டிய அவசர நிலையில் நாம் உள்ளோம்.

இல்லையென்றால், பிரித்தாளும் சூழ்ச்சியைப் பின்பற்றி இன்று ஆட்சி செய்யும் பிஜேபி ஆட்சி போல, எதிர்காலத்தில் மற்றொரு கட்சி வரும். ஆகவே, குடிமகன் அல்லது குடிமகள் என்ற நிலையில், நம்முடைய உரிமைகளைக் காக்கப் போராடி, சமூக-அரசியல் கடமைகளைச் செய்தால், சுதந்திர இந்தியா இன்னும் பல நூற்றாண்டுகள் பதற்றமின்றி பயணிக்கும். வாழ்ந்த இந்தியா! வளர்க இந்தியர்கள்!

# வினாடி வினா – 26 (விடைகள்)

| | | |
|---|---|---|
| 1. | விடுதலைப்பயணம் | 2:20 |
| | விடுதலைப்பயணம் | 5:15 |
| | விடுதலைப்பயணம் | 8:19 |
| 2. | விடுதலைப்பயணம் | 20:12 |
| | விடுதலைப்பயணம் | 20:23 |
| 3. | விடுதலைப்பயணம் | 15:23 |
| | விடுதலைப்பயணம் | 4:25 |
| | விடுதலைப்பயணம் | 17:7 |
| 4. | விடுதலைப்பயணம் | 14:24 |
| | விடுதலைப்பயணம் | 19:18 |
| 5. | விடுதலைப்பயணம் | 3:1 |
| | விடுதலைப்பயணம் | 10:13 |
| | விடுதலைப்பயணம் | 13:2 |
| 6. | விடுதலைப்பயணம் | 12:16 |
| | விடுதலைப்பயணம் | 18:3,4 |
| 7. | விடுதலைப்பயணம் | 7:7 |
| | விடுதலைப்பயணம் | 1:12 |
| 8. | விடுதலைப்பயணம் | 13:21 |
| | விடுதலைப்பயணம் | 3:14 |
| 9. | விடுதலைப்பயணம் | 9:24 |
| | விடுதலைப்பயணம் | 17:15 |
| 10. | சரி விடுதலைப்பயணம் | 10:23 |
| | தவறு விடுதலைப்பயணம் | 6:28 |
| | சரி விடுதலைப்பயணம் | முன்னுரை |

# விடுதலையும் விண்ணேற்பும்

வனஜா அமல்ராஜ், சூளை - சென்னை



ஆகஸ்டு மாதம். இது, நம் தாய்த் திருஅவையால் அமல அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறப்பு மாதம். அதிலும், அன்னையின் விண்ணேற்புப் பெருநாளையும் நம் தாய் மண்ணின் விடுதலைத் திருநாளையும் தாங்கி நிற்கும் இம்மாதத்தின் 15-ஆம் நாளானது மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழத்தக்கதாக மிகவும் சிறப்பிடம் பெறுகிறது. நம் வீரமண் இந்தியா விடுதலைபெற்ற அதே நாளில் அன்னையின் விண்ணேற்பு பெருவிழாவையும் கடன்திருநாளாகக் கொண்டாடி மகிழவே தாய்திருஅவை நமக்கு அழைப்பு விடுக்கிறது.

அமலியாய் உற்பவித்த மரியாள், அருள்மிகப் பெற்ற மரியாள், கன்னித் தாய் மரியாள், கடவுளின் தாய் மரியாள், மனுகுலத்தின் தாய் மரியாள், வியாகுலத்தாய் மரியாள், விண்ணேற்றமடைந்த மரியாள் என்று அன்னை மரியாளுக்குப் புகழாரம் சூட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் இந்நாட்களில் இறைத்திருவுளம் அறிந்து, இறைவார்த்தையின்படி வாழ மாந்தருக்கு மாதிரியாக வாழ்ந்து காட்டிய மாதரசி தாய்மரியை சிந்தையில் இருத்தித் தியானிப்பது விண்ணேற்பு பெருவிழாவுக்கு



பெருவிழாவுக்கு சிறப்பு சேர்ப்பதாகும். நாம் இம்மண்ணில் பிறப்பதற்குக் காரணமாய் இருந்த நம் தாய்க்கு நாம் ஆற்றும் கடனைப்பற்றியும் சற்றே சிந்தனையில் கொண்டுவருவது சாலச்சிறந்ததாகும்.

இவ்வுலகில், ஒவ்வொருத் பெற்றோரும் தம் பிள்ளைகளை உயர்நலையில் வைத்துப் பார்க்கவே விரும்புகிறார்கள்; அதற்காகவே, அவர்களை உருவாக்கிட இராப்பகல் என்று பாராமல் உழைக்கிறார்கள்; அதற்கு ஈடாக நாம் எதையும் அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிட முடியாது, என்றெல்லாம் பேசிவிட்டு அத்தோடு நிறுத்திவிடாமல் நம் உயர்நிலையிலும் அவர்களை நினைவுகூர்ந்து, முதுமையில் அவர்களின் உணர்வுகளை மதித்து, தேவைகளை உணர்ந்து, நமது தகுதிக்கும் மேலாக எதையும் எதிர்பார்க்காத அவர்களுக்கு முகங்கோணாமலும் முறுமுறுக்காமலும் கணக்குப்பார்காமல் கனிந்த இதயத்தோடு எதையும் செய்வதே கடவுள் நம்மிடம் எதிப்பார்க்கும் கடனாக இருக்கிறது.

உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுலகம் அடைந்த அன்னை மரியாள் சிலுவையடியில் ஈன்றெடுத்த திருஅவையின் மக்களாகிய நம்மையும் தம்மோடு இணைத்துக்கொண்டு விண்ணகம் அழைத்துச் செல்லவேண்டிய அதிமிக உன்னத பணியில் தம்மை முழுமையாகவே அர்ப்பணித்துள்ளார். அது ஆண்டவரால் அவருக்கு அருளப்பட்ட உன்னதமானப் பணியே ஆகும். அன்று கானாவூர் திருமண வீட்டில் ஏழைஎளிய மக்களின் நிமித்தம் ஏறெடுக்கப்பட்டு அரங்கேறியப் பரிந்துரை இன்றும் நமக்காகத் தொடர் நிலையில் இருக்கிறது. விடுதலை மண்ணில் விடுதலையோடு செயல்படத் தடைகள் ஆயிரம் வந்திடினும் எதிர்கொண்டு ஜெயமெடுக்க அன்னை மரியாளின் பரிந்துரையை நாடித் தடைகளை உடைத்தெறிவோம். உன்னத வாயிலை நோக்கி பயணிக்க உண்மை வழியை நாடிடுவோம். தூய ஆவியின் துணையோடு தூயநல் வாழ்வை நமதாக்குவோம்.

நம்மை இம்மண்ணிலிருந்து விண்ணிற்கு அழைத்துச் செல்ல தம் விலையேறப்பெற்ற மாசற்ற இரத்தத்தையே விலையாகக் கொடுத்து நம்மை மீட்டு இரட்சித்த இறைமகன் இயேசுவை இம்மண்ணீல் ஈன்றெடுத்த மனுகுலத்தாய் தாழ்ச்சி என்னும் போர்வைக்குள் தூயஆவியின் கனிகளால் தம்மை அலங்கரித்தவராய் வாழ்ந்து காட்டியத் தாய் நம்மையும் விண்ணகத்திற்கு ஏற்றிச் செல்லும் ஒரு ஏணியாக நின்று கொண்டிருக்கிறார். அவர் வழிநின்று இயேசுவின் சாயலாய் மாறுவோம். விடுதலை பெற்ற நம் தாய்த்திரு நாடு வன்முறை, வன்மம், பிரிவினை, பிளவுநிலை, மாறி பெற்ற சுதந்திரத்தை பேணிக்காத்திட, ‘வேற்றுமையில் ஒற்றுமை’ என்ற உணர்வில் மனிதநேயம் மலர்ந்திட இறையருள் வேண்டி அன்னையின் பரிந்துரையை நாடுவோம். இம்மண்ணில் சுதந்திரக் காற்றை சுவாசிப்போம். விண்ணிற்குரியோராய் வாழ்வோம்.

# இந்திய விடுதலைப் போரில் தமிழகப் பெண்கள்

கி. சதீஷ்குமார், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி~1.

"இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைபட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழி மிகுந்து இழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே"

என்னும் மகாகவியில் பாடல்வரிகள் விடுதலை வேள்வியின் தீரத்தை விடுதலையின் மாண்பை உணர்த்துகிறது.

'இப்பயிரை கண்ணீரால் காத்தோம்

கருகத் திருவுளமோ' என்னும் பாரதியின் வரிகள் இந்திய நாட்டின் விடுதலைக் கால வலியை ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்திய கொடுமைகளை கண்முன்னே நிறுத்துகிறது.

இத்தகைய விடுதலை வேள்வியல் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த தமிழ்ப் பெண்களின் வீரம், தியாகம், போர்க்குணம், சகிப்புதன்மை, யாவும் போற்றுதலுக்கும் வீரவணக்கத்திற்கும் உரியது.

இந்திய விடுதலைப் போரில் தமிழகததின் பங்களிப்பு அளப்பரியது. குறிப்பாக தமிழகத்தில் பெண்களின் பங்களிப்பு வேறெந்த மாநிலங்களை விடவும் முன்னத்தி ஏராய் போற்றக்கூடியது.

1. வீரமங்கை வேலுநாச்சியார்
2. கடலூர் அஞ்சலையம்மாள்
3. ருக்மணி லட்சுமிபதி
4. கிரு'ணம்மாள் ஜெகந்நாதன்
5. ஞ.சே.சுந்தராம்பாள்
6. அம்புஜதம்மாள்
7. சொர்ணத்தம்மாள்
8. கே.பி.ஜானகியம்மாள்
9. பத்மாசனி அம்மாள்

## 1. வீரமங்கை வேலுநாச்சியார்

இராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து சேதுபதியின் மகள் வேலுநாச்சியார். இவர் தன்னுடைய இளம் வயதிலேயே கல்வி, விளையாட்டு, சிலம்பம், வாள்வீச்சு, ஈட்டிஎறிதல், அம்புவிடுதல், குதிரைஏற்றம், யானை ஏற்றம் என அனைத்து திறன்களையும் கற்றுத் தேர்ந்தார்.

மேலும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், பிரெஞ்சு, ஆங்கிலம், உருது மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். தன்னுடைய 16ஆவது வயதில் சிவகங்கையை ஆண்ட முத்துவடுகநாதரின் மனையான வேலுநாச்சியார் வெள்ளைநாச்சியார் என்ற பெண் குழந்தையை பிரசவித்தார். சிவகங்கை செழிப்புடன் இருப்பதை அறிந்த ஆற்காடு நவாப் முகமதுஅலி தனது படைகளை அனுப்பி மன்னரிடம் கப்பம் கட்ட சொல்லி உத்தரவிட்டார். கம்பம் கட்ட மறுத்த முத்துவடுகநாதர்





மீது ஆங்கிலேயப் படையின் உதவியுடன் படையெடுத்த நவாம்அலி காளையார் கோவிலில் இருந்த அவரை வீழ்த்தி காளையார் கோயிலைக் கைப்பற்றினார்.

இதனையடுத்து பெருங்கோபம் கொண்ட வேலுநாச்சியார் மருது சகோதரர்களின் ஆலோசனையின் பேரில் தன் குழந்தையுடன் திண்டுக்கல் அருகேயுள்ள விருப்பாச்சி இடத்தில் தங்கினார். 8 ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த இவர் திண்டுக்கல் நவாப் ஹைதர் அலி உதவியுடன் பெரும் படையை திரட்டிக் கொண்டு 1780-ல் தன் படைகளை மூன்றாகப் பிரித்து ஆங்கிலேயருக்கு எதிராக மும்முனைத் தாக்குதல் நடத்தி வெற்றி பெற்றார்.

சிவகங்கை கோட்டையைக் கைப்பற்றிய வேலுநாச்சியார் ஆங்கிலேயக் கொடியை கீழிறிக்கி தங்கள் நாட்டு கொடியை பறக்கவிட்டார். இந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்த்து போராடி வெற்றி பெற்ற ஒரே அரிசி வேலுநாச்சியார் தான்.

### 2. கடலூர் அஞ்சலையம்மாள்

கடலூர் மாவட்டத்தில் உள்ள முதுநகரை சேர்ந்த அஞ்சலை அம்மாள், 1890 ம் ஆண்டு பிறந்தவர். ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். சிறுவயது முதல் சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வந்த அஞ்சலை அம்மாள், 1921 ல் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். இதில் கலந்து கொண்டதன் மூலம், தென்னிந்தியாவில் இருந்து ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற முதல் பெண்மணி என்ற சிறப்பு இவருக்கு உண்டு. தன்னுடையது என்று இல்லாமல் தனது குடும்பத்தினருக்கு என இருந்த நிலங்களையும், வீட்டையும் விற்று இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திற்காக பெரும் பணத்தை செலவிட்டார்.

தொடர்ந்து 1927ம் ஆண்டு நடைபெற்ற நீலன் சிலை அகற்றும் போராட்டம் என்ற போராட்டத்தில் அஞ்சலை அம்மாள் பங்கேற்றார். இந்த போராட்டத்தில் தன்னுடைய ஒன்பது வயது மகள் அம்மாக்கண்ணுவையும், இப்போராட்டத்தில் ஈடுபடுத்தி அக்குழந்தையுடன் சிறைக்குச் சென்றார். அங்கு சிறையிலேயே தன்னுடைய குழந்தையை வளர்த்தெடுத்த இவரை, அடிக்கடி காந்தி பார்வையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. தோடர்ந்து 1931ம் ஆண்டு அனைந்திந்திய மகளிர் காங்கிரஸ் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய இவரை 1932ம் ஆண்டு நடைபெற்ற வேறொரு போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். இவரின் இந்தப் போராட்டத்தின் காரணமாக ஆங்கிலேயே அரசு இவரை அனுமதிக்க மறுத்தது. இருப்பினும் இவர் காந்தியை சந்தித்தார்.

### 3. ருக்மணி லட்சுமிபதி

சென்னையை சேர்ந்த ருக்மணி லட்சுமிபதி 1892-ம் ஆண்டு பிறந்தார். விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் பள்ளி படிப்பையும், கிறிஸ்துவ கல்லூ ரியில் இளங்கலை பட்டம் முடித்தார். தொடர்ந்து இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்து பணியாற்ற



ஆரம்பித்தார். பாரீசில் நடந்த சர்வதேச பெண்கள் வாக்குரிமை மாநாட்டில் இந்தியாவின் சார்பாக கலந்து கொண்ட இவர், தொடர்ந்து தேர்தலில் போட்டியிட ஆரம்பித்தார். இதில் 1934-ம் ஆண்டு சென்னை மாகாண இடைத்தேர்தலிலும், 1937-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலிலும் வெற்றி பெற்று சட்டசபை சென்றார்.

தொடர்ந்து 1946-47 ம் ஆண்டு அமைச்சராகப் பணியாற்றினார். இதன்மூலம் சுதந்திர இந்தியாவில் சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் அமைச்சராக பதவி வகித்தவர் என்ற பெருமையும், தமிழகத்தின் முதல் பெண் அமைச்சர் என்ற பெருமையும் பெற்றார். முன்னதாக 1930-ம் ஆண்டு நடைபெற்ற உப்பு சததியாகிரகத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற இவர், உப்புசத்தியாகிரக போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற முதல் பெண் என்ற பெருமை பெற்றவர்.

## 4. கிருஷ்ணம்மாள் ஜெகநாதன்

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன் பட்டியை சேர்ந்த கிருஷ்ணம்மாள் ஜெகநாதன், சிறுவயதிலேயே தந்தையை இழந்து, ஏழ்மை நிலையில் இருந்த போதும் பள்ளிக் கல்வியை சிரமத்துடன் முடித்தார். தொடர்ந்து மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்த இவர் மதுரையில் பட்டம் முடித்த முதல் பெண் என்ற பெருமையை பெறுகிறார். தொடர்ந்து தான் சார்ந்த சமூகம், ஏழைகளின் நலன் சார்ந்து இயங்கினார்.



காந்தியக் கொள்கையால் பெரிதும் ஈர்க்கப்பட்ட இவர் சுதந்திரத்துக்காகப் போராடினார். ஆவரின் வழியிலேயே 1942-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கததில் கலந்து கொண்டு போராடியதால் பல ஆண்டுகள் சிறையிலே கழித்தார். அதன்பின், வினோபா பாவேவின் நிலமற்றவர்களுக்கான பாதையாத்திரை போராட்டத்தில் கலந்து கொண்டு பாதயாத்திரை மேற்கொண்டார். இந்திய சுதந்திரம் பெற்ற பின் தான் திருமணம் செய்து கொள்வேன் என்றிருந்தவர் தன்னுடைய காதல் திருமணத்தை இந்தியா சுதந்திரம் பெற்ற பின் 1950 வது வருடத்தில் செய்து கொண்டார். திருமணத்திற்கு பின் தன் கணவனுடன் இணைந்து ஏழை மக்களின் நலன், கல்வி மற்றும் நிலமற்றவர்களின் உரிமைக்காக பெரிதும் போராடினார்.

## 5. எஸ்.என்.சுந்தராம்பாள்



திருப்பூர் மாவட்டம் வீரபாண்டியில் 1913-ம்

